1987 ஏப்ரல் 24]

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சீர் மரபினர் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என அறிய விரும்புவதோடு, அவர்களெல்லாம் வாழ்க்கைத் தரத்திலேயும், பொருளாதாரத்திலேயும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு ஆதி திராவிட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் போல அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே சீர் மரபினர் தனிப் பிரிவாக வைத்து, தனியாகக் கவனிக்கப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும்.

ஆம்னி பஸ்கள்.

483—(*வினா எண். 9714) திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்னி பஸ்களுக்கான அனுமதிகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன ?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1939-ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டப் பிரிவு 51(1)-ன் படி ஆம்னி பஸ் அனுமதிகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆம்னி பஸ்கள் அனுமதி ஏதும் நமது மாநிலத்தில் தற்போது வழங்கப்படுவதில்லை.

(ஆ) புதியதாக அனுமதிகள் இப்பொழுது வழங்கப்படுவதில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட மொத்த அனுமதிகள் 71 ஆகும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற ஆம்னி பஸ்கள் பெரும்பாலும் ரூட் பஸ்களாகப் பயனபடுத்தப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இந்த ஆம்னி பஸ்களிலே கட்டணம் வேண்டிய அளவிற்கு விரும்பிய அளவிற்கு அவர்கள் வசூல் பண்ணிக் கொள்கிறார்கள். அதைப் போல பயணிகளையும் விரும்பிய அளவிற்கு அவர்கள் ஏற்றிக் கொள்கிறார்கள். புறப்படுகின்ற இடங்களிலேயும் எந்த நேரத்திற்குப் புறப்படுகின்றன என்ற விதியும் இல்லாமல், சேருகின்ற இடங்களிலே எந்த நேரத்திற்குப் போய்ச் சேருகின்றன என்ற நிலையுமில்லாமல் நிச்சயமற்ற தன்மை நிலவு

கிறது. இப்படிப் பல்வேறு குறைகள் இருக்கின்ற காரணத்தினாலே அரசு இதை எல்லாம் கவனித்திலே கொண்டு இந்த ஆம்னி பஸ்களை வரைமுறைப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்பொழுது 71 உரிமங்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை point to point என்ற வகையிலே ஓட்டப்படக் கூடாது; அதாவது ரெகுலர் சர்வீசாக இவைகள் ஓட்டப்படக் கூடாது. ஆங்காங்கே பொதுமக்கள் விரும்பினால், அவர்களை அழைத்துச் சென்று சுற்றுலா செல்வதற்காக பயன்படுத்துவதைப் போல அவர்கள் இதைப் பயன்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே சில உண்மைகள் இருக்கின்றன. அவர்கள் முறையாக அதைப் பயன்படுத்தாமல் பல தவறுகள் நடக்கின்றன. கட்டணத்தைப் பொறுத்த வரையில் நாம் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. காரணம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற கட்டணத்தை விட அதிகமாக வசூல் செய்தால் அவர்களுக்கு வசூல் ஆகாது என்ற காரணத்தினால் அவர்கள் முறையாக வைத்திருப்பார்கள்.

(முற்பகல் 10-40)

ஆனால் இன்றைக்கு அவற்றின் நடைமுறையில் இருக்கிற பிரச்சினைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இருந்தாலும் அதிகாரிகள் அவற்றை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இங்கே இருக்கிற 71 உரிமங்களையும் விட பக்கத்து மாநிலத்து வண்டிகள் பல தற்காலிக உரிமம் பெற்று வரக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் நமக்கு பல பிரச்சனைகள் உருவாகின்றன. அவற்றைத் தடுக்க அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த ஆம்னி பஸ்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, வருமானம் பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆம்னி பஸ்களைப் பொறுத்த வரையில் இதற்கு மேலும் அனுமதிக்கக் கூடாது என்று கருதுவதால் கூடுதலாக வருமானம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர் காலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1987 ஏப்ரல் 24]

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவரவர்களே, புதிதாக ஆம்னி பஸ்களை ஓட்டுகின்றவர்களுடைய வண்டிகளில் வீடியோ போன்ற சகல வசதிகளையும் அவர்கள் செய்திருப்பதோடு குறைவான கட்டணமும் வசூல் செய்கின்ற காரணத்தால் மக்கள் அதிகமாக அந்த வண்டிகளிலே பயணம் செய்ய விரும்புகிறார்கள். ஆகவே, தொலை தூரத்திலிருந்து வருகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் போன்றவற்றிலும் ஆம்னி பஸ்களில் இருப்பதைப் போன்று வீடியோ போன்ற எல்லா வசதிகளையும் செய்து தர அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு வண்டியை ஒரு தனியார் இயக்குகிறபோது ஒரே வண்டியை அவர்கள் முழுமையாகக் கவனிக்கிற வாய்ப்பு இருக்கிறது. அதோடு அந்த வண்டிக்குத் தேவையான ஓட்டுநர், நடத்துநர்களை வைத்திருக்கிறார்களா என்பதுகூட சந்தேகம். அப்படிப்பட்டவர்களோடு ஒப்பிட்டு, அதைப் போன்று திருவள்ளுவர், நேசமணி போக்குவரத்துக் கழக வண்டிகளிலும் வீடியோ போன்ற எல்லா வசதிகளையும் செய்துதருவது நடைமுறையில் பல சிக்கல்களுக்கு காரணமாக அமையும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வண்டிகளை மாற்றி, புதிய புதிய பேருந்துகளை விடுகிறது. பேருந்துகளை இயக்குவதில் தனியார்களோடு போட்டியிடுகின்ற அளவுக்கு இருந்தாலும் சில பேர்கள் பழக்கத்தின் காரணமாக தனியார் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். ஆகையால் நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, அவைகளைத் தடுக்க அந்தந்த போக்குவரத்துக் கழகமும், அரசும் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள்.

484—(*வினா எண். 10831) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள் எத்தனை ஓடுகின்றன?

(ஆ) அவற்றை தேசிய மயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 5,313.

(ஆ) வழித்தடங்களைத் தேசியமயமாக்கும் விரைவுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.